மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இது ஒரு பயிற்சிக் கூடமாக இருப்பதன் காரணமாக, பள்ளிக்கூடம் என்று கருதுவதால், தொழில் துறையிலிருந்து கல்வித் துறைக்கு மாற்றப்பட்டது. அது மட்டுமல்லாமல், மதிப்பிட்டுக் குழுவினரும், அவ்வாறு பரிந்துரை செய்திருந்தார்கள். தொழில் நடப்பது என்பதாலல்ல ; பயிற்சி நடக்கிறது என்ற காரணத்தால், மாற்றம் நல்லது என்று கருதப்பட்டது. எவ்வளவு செலவு என்பதைப் பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரங்கள் சேகரித்து அளிக்கப்படும்.

Opening of a Casualty Department in the Thanjavur Medical College Hospital

* 18 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether there os any proposal with the government to open a Casualty Department in the Thanjavur Medical College Hospital; and

(b) If not, whether the Government are aware of the experienced by the villagers in and around this Hospital for want of the same?

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசரச் சிகிச்சை பிரிவு தொடங்குதல்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி-மருத்துவமனையில் அவசரச் சிகிச்சைப் பிரிவு ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா ?

(இ) இல்லையெனில், இம்மருத்துவமனைப் பகுதியிலும், அதனைச் சுற்றிலுமுள்ள கிராமப்புற மக்கள், அத்தகைய அவசரச் சிகிச்சைப் பிரிவு ஒன்றில்லாமல் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) அக்டோபர் திங்கள் 1973ல் விபத்து பிரிவு ஒன்று தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் திறப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது.

(இ) கேள்விக்கு இடமில்லை. அண்மையில் இது துவக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அவசரச் சிகிச்சைப் பிரிவுக்கு வேண்டிய படுக்கை வசதிகள் அந்த மருத்துவ மனையில் செய்யப் பட்டுள்ளனவாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இட வசதி காரண மாக குறைந்த அளவு எண்ணிக்கையுள்ள படுக்கைகள் தான்—6 அல்லது 8 படுக்கைகள் தான்—ஒதுக்கப்பட்டுள்ளன.

Provision of Water Supply in the Government Hospital at Panchapatti in Tiruchirappalli District

*19 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state:

(a) whether it is a fact that there is no provision for water supply in the Government Hospital at Panchapatti in Tiruchirappalli District; and

(b) if so, the action proposed to be taken by the Government in the matter?

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பஞ்சப்பட்டியிலுள்ள அரசு மருத்துவ மனைக்குக் குடிநீர் வசதி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பஞ்சப்பட்டியிலுள்ள அரசு மருத்துவ மனைக்குக் குடிநீர் வசதி செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) பஞ்சப்பட்டியில் உள்ள அரசு மருத்துவமனையில் நீர் வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

THIRU G. SWAMINATHAN: Sir, when was this hospital opened? For how long was there no facility for water in this hospital?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தண்ணீர் ஏற்பாடே செய்யப்படவில்லை என்ற பிரச்சினை எழவில்லை. அங்கேயுள்ள சமுதாயக் கிணற்றிலிருந்து மருத்துவ மனையினுடைய தொட்டிக்குத் தண்ணீர் அனுப்ப வேண்டுமென்ற முறை இருந்தது. ஆனால் சமுதாயக் கிணறு கோடை காலத்தில் வற்றிவிடும் நிலைமை காரணமாக மருத்துவ மனைத் தொட்டிக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்ற நிலைமை ஏற்பட்டது. அது குறித்து பொதுப் பணித் துறைப் பொறியாளர் பரிசிலனை செய்து, தண்ணீர் கிடைப்பதற்கு கிணற்றை